நகைத்தாள் நங்கை

'அவர் படும்பாடு கண்டு, அவள் சிரித்தாள்!

இவரே இந்தப் பாடுபடுகிறாரே, மற்றவர்கள் எத்துணைப் பாடுபடுவாரோ, என்று எண்ணி அந்த நங்கை நகைத்தாள்.

யார்? ஏன்? என்று கேட்பீர்கள் – ஆவலாகத்தானே இருக்கும். உடனே கூறுவதற்கில்லை – உயர்ந்தோர் விவகாரம் – உதவாக்கரைகளின் விஷயமல்ல. சற்றே பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

கட்டுக் கட்டாக விபூதி! கழுத்திலே உருத்திராட்சம்! கசிந்து கண்ணீர் மல்கி, கை தொழுது நிற்கும் காட்சியைக் கண்டாலே, எவரும், இஃதன்றோ பக்தி, இவரன்றோ ஈசனார்க்குற்ற தொண்டர், நமக்கு வழிகாட்டி, என்று வியந்து கூறுவர், வீழ்ந்து வணங்குவர். உள்ளம் உருகப் பாடுபவர்.

அருட்கடலே! ஆனந்த வாரிதியே! அம்பலத்தரசே! உம்பர் தம் கோனே! உலகின் முதல்வா! உமையொரு பாகா! என்றெல்லாம் பதிகம் பாடிப் பரமனை தொழுதிடும் பக்தர்!

அப்படிப்பட்டவர்!

ஒரு தாசி மகளைக் கண்டு, காதல் கொண்டு விடுகிறார்.

ஆலயத்தில்!!

மனதிலே மூண்ட காதல், கொழுந்துவிட்டு எரிகிறது.

மழுவேந்திய மகேசனைப் பாடிடும் அடியார், தன் மனதிலே மூண்ட காதல் தீயைத் தாங்கொணாமல், தத்தளிக்கிறார்.

ஐயனுடைய கோலத்தைப் பாடிப் புகழ்ந்த வாயால் ஆரணங்கின் வடிவழகைப் பாடிப் புகழ்கிறார்.

ஐயனுடைய அருளைக்கூடப் பெறுவதிலே ஆவலையோ, அவசரத்தையோ, அதிகம் காட்டிடாதிருந்தவர், அந்த அழகியைக்

கண்டதும், அவளை அடைந்தே ஆக வேண்டும், என்று துடியாய்த் துடிக்கிறார்.

தொண்டர்! கடவுளின் தோழர்! அவர் பெண்ணைக் கண்டார், மனதைப் பறிகொடுத்தார்.

மாயா விகாரத்தை நீக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன், சாமான்யர்களும் ஆலயம் செல்கிறார்கள்.

துடியிடைக்கும் கொவ்வை அதரத்துக்கும் மனதை பறி கொடுத்துவிட்டு, மாயா உலகிலே உழலாதே, தோடுடைய செவியனைக் கண்டு காமக் குரோத மதமாச்சரியங்களை நீக்கிக் கொள் – என்று உபதேசிக்கப்படுகிறது.

உபதேசம் தேவையற்ற நிலை, அடியாருக்கு – அவரே உபதேசியார். அவரே, ஐயனை மறந்து, ஆசைக்கு மனதிலே இடமளித்து, ஆலாய்ப் பறக்கிறார் என்றால், சிரிக்காமலிருக்க முடியுமா?

அதனாலேதான், அவர் படும்பாடு கண்டு அவள் சிரித்தாள்!

அதிலும், அடியார், காதல் நோய் கொண்ட இடம், ஆலயம்!

தரிசனம் காணச் சென்றார், ஒரு தத்தை மொழியாளைக் கண்டு, மனதைப் பறி கொடுத்துவிட்டார்.

இவ்வளவுதானா, இவர் உறுதி! மற்ற ஆடவருக்கும் இவருக்கும் என்னதான் வித்தியாசம்!

பக்தி ததும்பும் மனம் – எனினும் அதிலே காதல் அலை மோதுகிறதே.

சாமான்யர்களாவது, இடம் கவனித்து, பெருமூச்சுடன் நின்று விடுவர் – இவரோ இடம், நிலை, எதையும் பொருட்படுத்தக் காணோம். பொன்னார் மேனியனை மறந்து, பூங்கொடியை அல்லவா புகழத் தொடங்கிவிட்டார்.

இதை எண்ணும்போது, எப்படித்தான் சிரிக்காமலிருக்க முடியும்!

எனவேதான், மங்கை சிரித்தாள்.

அழகான பல் வரிசை வெளியே தெரியச் சிரித்தாள்.

யார் அவள் என்கிறீர்கள்!

யாருடைய நிலை கண்டு, என்று கேட்கிறீர்கள்.

பெரிய இடத்து விஷயம் என்று முதலிலேயே கூறி விட்டேன்.

''நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து'' என்று இடித்துரைக்கப் படவேண்டிய ஓர் இளைஞன் போலும், தூய்மைக்கு இருப்பிடமும், பிறவிப் பிணிக்கே மருந்தளிக்கும் மாண்புமிக்க இடமுமாகிய, தேவாலயத்திலே கேவலம் பெண்ணைக் கண்டு மயக்கமடைந்தான்.

கோயில் சென்றது இதற்கா?

பிற இடங்களில் நடமாடும் போது மனதிலே எழக்கூடிய கேடுகளை எல்லாம் களைந்தெறிய, ஆலயம் சென்று தொழுவது சாலவும் நன்று என்று ஆன்றோரும் சான்றோரும் கூறினர் – அக்ரமத்தைப் பாருங்கள் – அடியார் என்று அழைக்கப்படும் நிலை பெற்றவர், ஆலயத்திலே ஒரு ஆரணங்கைக் கண்டு, காதலிப்பதா. . . செச்சே. . . என்பீர்கள். . . அவர் யார், என்பதைக் கூறாமுன்பு.

சாதாரண மக்களுக்கு, இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் சாடுவார் எவரும்.

அக்ரமம்! அபசாரம்! என்று பதறுவர். பெரியவர்கள்.

இப்படிப்பட்ட கெடுமதி படைத்தோரைத் தேவாலயம் நுழைய விடுவதே பாபம், என்று கடிந்துரைப்பர்.

கடவுளைக் காணவா இந்தக் காளைகள் கோயிலுக்கு வருகிறார்கள். கண்ணடிக்க கைகாட்ட, இதற்கல்லவா! – என்று மனம் நொந்து கூறுவர்.

இவ்வளவும் இதற்கு மேலும் கூறுவர், கோயில் சென்று கோலமயிலனையாள் ஒருத்தியைக் கண்டு, ஒருவன் காதல் கொண்டால்,

இவரை அங்ஙனம் கூறமாட்டார்கள் பெரியவர்கள்!

ஏனெனில், இவர் அடியார் – சாட்சாத் சுந்தரமூர்த்தி நாயனார்!!

அவர், திருவாரூர் எனும் தலத்தில் தேவாலயத்தில் தரிசனத்துக்காகச் சென்று, அங்குப் பரவையார் எனும் பதியிலார், குலமங்கையைக் கண்டு, காதலிக்கிறார் பரமனைப் பாடித் தொழுது வந்தார், பரவையார் எனும் பாவையைக் கண்டார், பக்தி – படுத்தது, காதல் அவரைப் பிடித்தாட்டலாயிற்று.

தேவாலயத்திலேதான்!!

தேவாலயம் சென்றது சரி – பதிகம் பாடினார், உண்மை – எனினும் மனதைக் கட்டிக் காக்கும் பரிபக்குவம் அவருக்கு

அப்போது ஏற்படவில்லை போலும், அதனால்தான் பரமனைத் தொழச் சென்ற புனித இடத்திலே, அவர் மனம் அலையத் தொடங்கி விட்டது – என்று கூறிச் சமாதானம் தேடுவதற்குமில்லை, ஏனெனில் சுந்தரர், திருவாரூரில் தேவாலயத்தில் பரவையாரிடம் காதல் கொண்ட காலம். அவர் பக்குவம் பெறாத காலமல்ல.

பக்குவம் பெறாத நிலையா, என்பதை இப்பதிகங்களின் துணைக் கொண்டு, பாருங்கள்:–

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
    அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
    திருந்து சாத்விகமே ஆக

இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
    எல்லைஇல் தனிப்பெரும் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
    மாறுஇலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
    உன்தன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்தபிறவியே எனக்கு
    வாலிதாம் இன்பமாம் என்று

கண்ணில் ஆனந்த அருவிநீர் – சொரியக்
    கைம்மலர் உச்சிமேல் குவித்தும்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
    பாடினார் பரவினார் பணிந்தார்.

இது தில்லையில்! திருவாரூர் தரிசனத்துக்கு முன்பு!!
கண்ணில் ஆனந்த நீர்.
கை, உச்சி மேல்.
அறிவரும் பதிகம் பாடுகிறார்.
பரவினார்.
பணிந்தார்.

எனக்கு இதைத்தவிர வேறு இன்பமும் உண்டோ – என்கிறார்.

இந்த இன்பம் பெற ஏதுவாக இருந்த பிறவியையே பாராட்டவும் செய்கிறார்.

அப்படிப்பட்ட 'பக்குவம்' கிடைத்துவிட்டது.

ஆகவே பக்குவமற்றநிலை என்று கூறிட முடியாது.

பாதிமதியணி வேதமுதல்வனைக் கண்டு நெஞ்சு நெக்குருகிறார்.

பரவையாரைக் கண்டார் – பாகாய் உருகலானார் – பாருங்கள், பதிகத்தை:–

மான் இளம்பிணையோ! தெய்வ
வளர் இளமுலையோ! வாசத்
தேன் இளம்பதமோ! வேலைத்திரை
இளம் பவளவல்லிக்
கான்இளம் கொடியோ! திங்கள்
கதிர்இளம் கொழுந்தோ! காமன்
தான்இளம் பருவம் கற்கும்
தனிஇளம் தனுவோ என்ன?

எம்மானை, பெம்மானை ஏத்தி ஏத்தித் தொழுது, இதன்றி வேறோர் இன்பமும் உளதோ என்று பாடிய பரம பக்தா, பரவையாரைக் கண்டதும்,

மானோ
மலரோ
தேனோ

என்று அர்ச்சிக்கிறார்! எப்படி முடிந்தது!!

அருளை நாடிச் செல்கிறார் – அது கிடைக்கும் இடம் என்று அறிந்து ஆலயம் செல்கிறார் – அங்கு இந்த எண்ணம்? எப்படி நுழைந்தது! புண்ணியம் தேடிச் சென்ற இடத்தில் பூவை மீது காதலா!!

ஏற்படலாமா! இயற்கைதான் என்றால், சாமான்யருக்கும், நாயனாருக்கும் என்ன வித்தியாசம்!

அவர், அது குறித்துக் கவலைப்படவுமில்லை. பிறர் கவலைப் படுவார்களே என்று எண்ணவுமில்லை.

அவர் இதைப் புண்ணியத்தின் புண்ணியம் என்கிறார்.

சிவன் அருள் என்றே செப்புகிறார், பதிகம் இதோ:–

கற்பகத்தின் பூங்கொம்போ!
காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ! புயல் சுமந்து

விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக் கொடியே
அற்புதமோ! சிவன்அருளோ
அறியேன்என்று அதிசயித்தார்.

இந்த நிலை கண்டு, யார்தான் சிரிக்க மாட்டார்கள்!

ஊருக்கு உபதேசம் - உனக்கில்லை என்பது போல்.

எல்லாம் சொல்லுமாம் பல்லி காடிப் பானையில் விழுமாம் துள்ளி என்பதுபோல்,

கன்னியரின் கடைக்கண் வீச்சு, காவியின் சாயத்தையும் வெளுக்கடிக்கும் என்பதுபோல்,

கன்னியரின் கடைக்கண் வீச்சு, காவியின் சாயத்தையும் வெளுக்கடிக்கும் என்பதுபோல்.

அருட்கவி - ஆண்டவனின் தோழன் - பக்தி மார்க்கத்தைப் புதுப்பிக்க வந்த பரமாச்சார்யன் - என்று பலப்பல கூறினாலும், அவரும், ஒரு முல்லையைக் கண்டால், காதல் கொள்ளத்தான் செய்கிறார்.

சாமான்யர்கள், எழுப்பிய எண்ணத்தை அடக்கப் பார்ப்பர். இவரோ, இதற்கும் அழகாகப் பாடுகிறார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்! இந்துவாழ் சடையாய்! என்றெல்லாம் ஈசனாரை எவ்வளவு அருமையாகப் பாடினாரோ, அதே போலத்தான் பரவையாரை,

கற்பகத்தின் பூங்கொம்பே! மதிபூத்த விரைக்கொடியே என்று அழகுறப் புகழ்கிறார்.

அம்மட்டோ! புண்ணியம் தேடிச் சென்றவர், சிவனருளை நாடிச் சென்றவர், இந்தக் 'காமன்தன் பெருவாழ்வு' தேடியா அலைவது என்று, எவனாவது கேட்டால் என்ன செய்வதென்று துணிந்து, இதுதான் சிவனருள் என்றே கூறி, வாயை அடைத்து விடுகிறார்.

அழகிய அணங்கு ஒரு அடியாரின் நிலையை எப்படி மாற்றி விட முடிகிறது, என்று காணும்போது, பலருக்குச் சிரிப்புத்தான் வரும், பக்தரின் பெயருக்கு இழுக்கு வரலாகாது என்பதற்காக, புராணம் பாடினவர், அடியாரின் நிலை கண்டு, சிரித்த மங்கை வேறு, யாருமல்ல; இரவு எனும் மங்கைதான் - சிரித்தாள் என்றால்; நிலவு உதித்தது என்று பொருள் கொள்க என்று கூறுகிறார்.

மறுகில் சிந்தைவன் தொண்டர் வருந்தினால்
இறுமருங்கு லார்க்கு யார் பிழைப்பார் என்று
நறுமலர்க் கங்குல்நங்கை முன்கொண்ட புன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா.

வெண்ணிலா எனும் பல்வரிசை வெளியே தெரிய இரவு எனும் நங்கை நகைத்தாளாம்!

இன்று. . .!

பக்தர்களின் போக்கு பற்றிய ஆய்வுரை செய்வோர் அனைவருமே நகைத்திடத்தான் செய்கிறார்கள்.

தேவாலயம் சென்ற அடியார் விலைமாதைக் கண்டு காதலித்தார் என்றால், சிரிக்காமலிருப்பது முடியுமா!

'அடியார்' இவ்வாறு 'சிவனருள்' காண்கிறார்! பரவையாரும் அடியாரைத் துணைவராகப் பெற்று, 'பக்தி' சுவைக்கிறார். இந்தத் தொண்டு குறைவில்லாமல் நடைபெற வேண்டியதற்காக, அடியார் பொருள் ஈட்ட வேண்டுமல்லவா! என் செய்தார்? பொதிமாட்டின் மீது சரக்குகளைப் போட்டுக் கொண்டு, காடு பல கடந்து வேற்றூர் சென்று வாணிபம் செய்து பொருள் ஈட்டினாரா? கடினமான உடல் உழைப்பு மேற்கொண்டாரா? ஏன் செய்வார்! அவர் யார் அடியார்! அதிலும் அந்தணர்! அவரைப் பாடுபடும்படி விடுவாரோ!!

குண்டையூர்க் கிழவர் என்பவர் ஓர் வேளாளர் பெருநிலக் கிழார், இவர் 'சிவனருளை'ப் பரவையார் வடிவிலே பெற்று 'தொண்டு' செய்துவரும் அடியாருக்குத் தொண்டரானார்!

'செந்நெல்லும் பொன் அன்ன செழும்பருப்பும், குண்டையூர்க் கிழவர், வேண்டியமட்டும் தருகிறார் – பாடுபட்டுப் பலன் காணால் பட்டினி கிடப்போர் பலர் இருக்கத்தான் செய்தனர் – குண்டையூராருக்கு அவர்களை எல்லாம் கவனிக்க, அவர்களுக்கு உதவவா நேரம் கிடைக்கும் – ஆலயம் சென்று அரனருளை ஆரணங்கு வடிவத்திலே பெற்ற அந்தணரைக் கவனிப்பதா, மாடு போல உழைத்து, நாய் படாத பாடுபட்டு நமக்கேன் இன்னும் சாவு வரவில்லை என்று நொந்து கொள்ளும் பஞ்சைகளைக் கவனிப்பதா! எது முக்கியம்! அடியாரும் ஆரணங்கும், செய்துவரும் 'சிவத்தொண்டு' முட்டின்றி நடைபெறப் பார்த்துக் கொள்வதல்லவா, முக்கியம்! குண்டையூர் கிழவர், அதன் பொருட்டே செந்நெல்லும் பொன் போன்ற பருப்பும் அடியாருக்கு

அளித்து, இனி நமக்கென்ன குறை, ஆண்டவனுடைய குறிப்பேட்டில் நமது பெயர் ஏறிவிடும். எனவே, நமக்கு மேலுலகில் மேலான இடம் கிடைப்பது உறுதி என்று எண்ணினார்; அகமகிழ்ந்தார்.

குண்டையூர்க் கிழவர் போன்றோர் தேவையான பொருளைக் கொடுத்தபடி இருந்தால், நாங்களும் கூடத்தான் எங்களுக்கேற்ற பரவையாரை அடைந்து, சிவபூஜை செய்து கொண்டு காலந்தள்ளுவோம் – என்று கூறுவீர்கள். நீங்களென்ன அடியார்களா! அடியார்கள் என்ற போதிலும் அந்தணரா, உங்களுக்கு இந்த யோகம் கிட்ட!!

மிராசு மார்த்தாண்டம் பிள்ளையிடம் காலில் வெள்ளெலும்பு முளைத்த நாள் முதலாய்த்தான் கந்தப்பன் அடிமை வேலை செய்து வருகிறான் – அவனுடைய மனைவிக்குத்தான் கடுமையான குன்மம் – மிராசுதாரர் 'தர்ம ஆஸ்பத்திரிக்கு' அவளை அனுப்பச் சொல்லிவிட்டு, கந்தப்பனிடமே ஐம்பது ரூபாய் கொடுத்து ஐங்கரன் கோயில் குருக்கள் சிவாச்சாரியாரிடம் தந்து விட்டு வரச் சொல்லி அனுப்புகிறார் – சிவாச்சாரியார் அதைத் தன் மகன் சேகரனுக்கு அனுப்பப் போகிறார் – அவன் சென்னை கல்லூரியில் பி.ஏ.வுக்குப் படித்துக் கொண்டிருக்கிறான் – சிகரட் கடையில் மட்டும், ஆறு ரூபாய் பாக்கி இருக்கிறது இது இந்நாள்! அந்நாளில் குண்டையூர்க் கிழவர், சுந்தரருக்குச் செந்நெல்லும் செழுபருப்பும் தந்து உதவினார்!!

வேளாள வள்ளல் மட்டுமல்ல, பாதிமதி சூடிய பரமனேகூட இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார்!

சுந்தரருக்குக் குண்டையூரார் நெல் தந்து வந்தார். சில காலத்துக்குப் பிறகு, மழை இல்லை. கடும் பஞ்சம் குண்டையூராருக்குப் பெருங்கவலை பிறந்து குடையலாயிற்று – ஏன்? பஞ்சம் காரணமாக உழுது அறுத்தெடுத்து குண்டையூராரின் களஞ்சியத்தில் செந்நெல்லைக் கொட்டிவிட்டுச் செல்லும் உழவர்களே, சோற்றுக்குத் திண்டாடுகின்றனரே என்பதாலா! பொதுவாக மக்கள், பஞ்சம் காரணமாகப் பரிதவிக்கிறார்களே, என்பதாலா! செச்சே! இப்படிப்பட்ட சாதாரணக் கவலை. உங்களுக்குத் தோன்றும்! அவர் கவலை வேறு!

"வன்தொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல் எடுக்க இன்று குறை ஆகின்றது என் செய்வேன்" ஐயகோ! நான் என் செய்வேன்! திருவாரூரில், சுந்தரமூர்த்தி நாயனார் தம்

சிவனருளுடன் (பரவையாருடன்) வாடுவாரே, அவருக்கு நெல் தர இயலவில்லையே, என்று கவலைப்படுகிறார், குண்டையூர்க் கிழவர்.

நமக்குத் தாராளமாகவும் ஏராளமாகவும் நெல்லும் பருப்பும் தந்து உதவி வந்தாரே, குண்டையூர் வேளாளர், அவர் இந்தப் பஞ்சம் காரணமாக, என்ன கவலைப்படுகிறாரோ பாபம். என்று அடியார் கவலைப்பட்டாரோ! கவலைப்பட்டாதகத் தெரியவில்லை பதிகம்! கூறுகிறது, என் செய்வேன்! என்று குண்டையூர்க் கிழவர்தான் கவலைப்பட்டார் என்று.

நெல் தருகிறார், சிவனார் ஏராளமாக – மலை மலையாக – குண்டையூரில் நெல்லைக் குவித்துவிட்டு, சிவனார், இது சுந்தரருக்கு! என்று கூறி விடுகிறார், கிழவனாரிடம்!

என் அடியாருக்கு இவ்வளவு உள்ளன்புடன் நெல் தந்து வருகிறாயே. பக்தி மிக்கோனே மெச்சினேன் உன்னை இதோ மலை மலையாக நெல்லைக் குவித்திருக்கிறேன் – வாரி வாரி வழங்கு – வறியோர்க்கெல்லாம் உதவு – வள்ளலல்லவோ நீ! – உன்னை வாட விடுவேனோ – எடுத்துக் கொள் என் அருளை – என்று சிவனார் செப்பினாரோ! இல்லை! இல்லை! சுந்தரருக்காக இந்த நெல் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்! சிரிப்பு வராமலிருக்க முடியுமா, நங்கைக்கு மட்டுமல்ல, நமக்கெல்லாம் கூடத்தான்!

சுந்தரரின் சொல்லும் செயலும் நம்மை மேலும் சிரித்திடச் செய்கிறது.

குண்டையூர்க் கிழவனாரே! குணக்குன்றே! சிவனாருக்கு உம்மிடம் எத்துணை அன்பு! அருள் பாலித்தாரன்றோ!! – என்று பாடிப் புகழ்ந்து, சிவன் அருளால் கிடைத்த இச் செந்நெல். பஞ்சம் பரவியிருக்கும் இக்காலை உம்மிடமே இருக்கட்டும் – வறியருக்கு உதவட்டும், என்று கூறினாரா அடியார்? கூறுவாரா? அந்த அந்தண அடியார் கூறியதைக் கேண்மின் –

''நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கை
தொழுவேன்''

என்று சிவனாரைத் துதிக்கிறார்.

மலை மலையாக வேண்டாம், பசித் தீ அடங்குமளவுக்கு உணவளித்தாலும் போதும் பரமனே! உன் பாத மலரை அனுதினமும் தொழுதிடுவேன் – என்று நாமும்தான் கூறுகிறோம்

– பட்டினியுடன் போரிடுவோர் சொன்ன வண்ணம் இருக்கத்தான் செய்கிறார்கள். பரமன், குண்டையூர்க் கிழவர்களையும் படைத்து, அவர்களிடம் உதவியை உரிமையுடன் பெற்றுக் கொள்ள உயர்குல அடியார்களையுமன்றோ படைக்கிறார்!

மலை மலையாக நெல் குவிந்து கிடக்கிறது – மகிழ்ச்சிப் பெருக்கெடுத்திட வேண்டுமன்றோ!

சுந்தரருக்குக் கவலைதான் பிறந்தது – என்ன கவலை – இதைத் திருவாரூர் கொண்டு சேர்க்க ஆள் இல்லை!! இறைவனிடம் இதற்கும் கேட்கிறார்.

''வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டைஊர் சில நெல்லுப்
பெற்றேன்
ஆள் இலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே!''

இந்த நெல் கிடைத்தது – இதை திருவாரூர் கொண்டு சேர்க்க ஆள் இல்லையே அதற்கும் ஆள் அனுப்பு என்றார்; ஐயன் அனுப்பினார்!!

மலை மலையாக நெல்! சில நெல்லுப் பெற்றேன் – என்கிறார்!!

''என்ன மகாப்பிரமாதமான தான தர்மம் செய்து விட்டான்! வித்யாதானமாக ஒரு ஐம்பது ரூபாய் பிச்சைக்காசு கொடுத்தான். அவ்வளவுதான்!'' என்று சிவாச்சாரியார் கூறுகிறார் சுந்தரமூர்த்தி நாயனார் – சில நெல்லுப் பெற்றேன் என்று கூறினார்!!

இளையன் குடிமாறன் – ஒரு சிவபக்தர்!

சுந்தரர்போல, சிவனருளால் செம்பொற் சிலையன்ன பரவையாரும் செந்நெற் குன்றும் பெற்றவரல்ல, இருந்த தனைத்தையும் சிவனடியார்களுக்கு உணவளிப்பதிலேயே செலவிட்டவர். அவருக்கு உடைமை போய், அவர் உருக்குலைந் திருக்கும் நேரம், சிவனார், அடியாராக வேடமிட்டு வந்தார். நள்ளிரவு! உணவு கேட்கிறார்! அடியார் வீட்டிலேயோ, ஏதும் இல்லை! பட்டினி! பதறுகிறார், கை பிசைந்து கொள்கிறார். இளையான் குடியார்!

அவர் செய்துவந்த அன்னமளிக்கும் திருத்தொண்டுக்காக, எந்தக் குண்டையூர்க் கிழவர் உதவியும் அவருக்குக் கிடைக்க வில்லை. சுந்தரருக்குக் கிடைத்தது போலச் சில நெல்லும்

கிடைக்கவில்லை. தராதது மட்டுமல்ல, உணவு தரச் சொல்லி, நள்ளிரவிலே வந்து கேட்கிறார் சிவனார். பெருமழை வேறு பெய்து தொலைக்கிறது – என் செய்வார் இளையான்குடி! அன்று தான் தூவிவிட்டு வந்திருக்கிறார். வயலில், நெல்! அதைப் போய் பொறுக்கிக் கொண்டு வந்து, அமுதாக்குகிறார்! ஐயன் அவருக்குப் பிறகு 'கயிலைவாசம்' தருகிறார்.

இளையான்குடி மாறனாருக்கு இந்த நிலையையும், சுந்தரமூர்த்தியாருக்கு அந்த நிலையையும், அருளிய காரணம் யாது? அவன் அருளின் தன்மையை அறிந்தவரெனத் தம்மைத் தாமே கூறிக் கொண்டு நாவாணிபம் நடாத்தும் நல்லவர்கள் யாது கூறுவரோ, நாமறியோம். ஒன்று பளிச்செனத் தெரிகிறது. இளையான் குடிமாறனார் வேளாளர் – சுந்தரமூர்த்தி நாயனார், பார்ப்பானர்!! பரமன் பார்ப்பன பக்தர்கட்கு அருள் பாலித்த வகையும், பார்ப்பனரல்லாத இனத்துப் பக்தருக்கு அருள் பாலித்த வகையும், ஏறத்தாழ, இன்று மிராசு மார்த்தாண்டம் பிள்ளை, கந்தப்பனிடமும் சிவாச்சாரியாரிடமும் நடந்து கொள்ளும் விதம் போலத்தான் இருக்கிறது – சிரிப்பு வராமலிருக்க முடிகிறதா!

இவ்வளவு 'பிரத்யேக' அருளுக்குப் பாத்திரமான சுந்தரர் 'பவித்திரமான' ஆலயம் சென்று, பரவையாரைக் கண்டு காதலுற்றார்! சிரிப்பு எப்படி ஏற்படாமலிருக்க முடியும்!

ஐந்தும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை.

என்றார் திருமூலர்.

அமரர் உலகு போவானேன் – இதோ அடியார் உலகு படும்பாடே தெரிகிறதே!

14-1-1955

❄ ❄ ❄ ❄ ❄